செ.வெ.எண் : 16/ ஆகஸ்ட் நாள் : 08.08.2017

**இராமநாதபுரம் மாவட்டத்தில்**

**இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆகஸ்ட் 2017 திங்களுக்கான இலவச கண் சிகிச்சை முகாம் 13.08.2017 அன்று கிருஷ்ணன்கோவில் சங்கரா கண் மருத்துவமனை சார்பில் கடலாடி அரசு மேல்நிலைப்பள்ளியிலும், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் பரமக்குடி JM மஹாலிலும், 18.08.2017அன்று நிலக்கோட்டை தமியான் கண் மருத்துவமனை சார்பில் பாம்பன் செயிண்ட் அந்தோணியார் தொடக்கப்பள்ளியிலும், 19.08.2017 அன்று கிருஷ்ணன்கோயில் சங்கரா கண் மருத்துவமனை சார்பில் பரமக்குடி ஆயிர வைசிய தொடக்கப்பள்ளியிலும், 20.08.2017 அன்று மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை சார்பில் இராமநாதபுரம் TVS ஷோருமிலும் நடைபெறவுள்ளன.

இம்முகாமில் பொதுமக்கள் கலந்துகொண்டு கண் தொடர்புடைய நோய்களுக்கான சிகிச்சையினைப் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**